(இ) அதன் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. க. துரைசாமி : அமைச்சர் அவர்கள், மேட்டுப்பாளையத்தில் இ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் ஆஸ்பத்திரி கட்டுவதற்கில்லை என்று சொன்னார்கள். பொது மருத்துவமனையிலாகிலும் இ.எஸ்.ஐ. வார்டில் பத்து படுக்கைகளை அதிகமாக்க அரசாங்கம் விரைவில் முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பொது மருத்துவ மனையில் இ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் 16 படுக்கைகள் கொண்ட ஒரு வார்டைக் கட்ட வேண்டுமென்று அரசாங்கம் உத்தேசித்து அதற்கு ஒப்பம் அளித்தது. ஆனால் மத்திய சர்க்கார் ஒத்துக் கொள்ளவில்லை. அதற்காகக் கடிதப் போக்குவரத்து நடந்து கொண்டிருக்கிறது.

திரு. சு. துரைசாமி : அமைச்சர் அவர்கள் 16 படுக்கைகள் கொண்ட ஆஸ்பத்திரி கட்டுவதற்குத் திட்டமிருப்பதாகச் சொன்னார்கள். விரைவில் அதைக் கட்டி முடிப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : மருத்துவ மனை கட்டுவதாகச் சொல்லவில்லை. ஒரு வார்டு கட்டுவது பற்றி திட்டம் இருக்கிறது என்று தான் சொன்னேன். இ.எஸ்.ஐ. கார்ப்பொரேஷனிடமிருந்து ஒப்புதல் கிடைத்த பிறகு நிறைவேற்றப்படும்.

தமிழ்நாடு மின்சார வாரியத்துக்குத் தேவையான இரும்புக் கம்பங்கள்.

*165 வினா—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத் தேவையான இரும்புக் கம்பங்கள் எந்தெந்த நிறுவனங்களிடத்தில் எந்த அடிப்படையில் வாங்கப்படுகிறது ?

(இ) 1965–66, 1966–67, 1967–68 ஆகிய ஆண்டுகளில் முறையே எந்தெந்த நிறுவனங்களில் எவ்வளவு ரூபாய் மதிப்புள்ள இரும்புக் கம்பங்கள் வாங்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு ஓ. பி. ராமன் : (அ & இ)—தமிழ்நாடு மின்சார வாரியம் தற்போது கிராம மின் வசதிப் பணிகளுக்காக உருக்குக் குழாய்க் கம்பங்கள், இரயில் கம்பங்களைத் தருவிக்க ஏற்பாடுகள் செய்வதில்லை. 33 கிலோ வாட், 66 கிலோ வாட் உயர் அழுத்த மின் விசைக் கம்பிகளுக்கு உறுதியான உருக்கு உத்திரங் கள் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஒப்பந்தப் புள்ளிகளை அனுப்புமாறு கேட்டு அறிவிப்பு வெளியிட்ட பிறகு அவற்றைத் தருவிக்க 1966–67-ல் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அச்சாதனங்களைத் தருவிக்கச் செய்யப்பட்ட ஏற்பாடுகள் குறித்த விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை* ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கொளத்தூர் கோதண்டம் : 1966–67-க்கு மட்டும் வாகப்பட்டிருப்பதாகவும், அதற்குப் பிறகு சாமான்கள் தேவையில்லாததால் வாங்கவில்லை என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்குப் பிறகு என்ன பயன்படுத்தப்படுகிறது என்பதை மேஜை மேல் வைக்கப்பட்டிருக்கும் குறிப்பில் பார்க்கும்போது 1966–67-ல் மூன்று குறிப்பிட்ட கம்பெனிகளில் குறிப்பிட்ட விலைக்கே வாங்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதெல்லாம் டெண்டர் மூலம் வாங்கப்பட்டதா அல்லது வேறு கொட்டேஷன் மூலம் வாங்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

---

* 81,ம் பக்கத்தில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு ஓ. பி. ராமன் : இந்தச் சாமான்கள் வாங்கப்படுவது டெண்டர்கள் மூலந்தான்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த விவர அறிக்கையில் தனியார் துறை விலை பற்றி மாத்திரந்தான் இருக்கிறது. பொதுத் துறையில் கூட ஸ்டீல் போஸ்ட்கள் உற்பத்தி செய்யப்படுவதாகத் தெரிய வருகிறது. பொதுத் துறையில் இவற்றை வாங்குகிறார்களா இல்லையா என்ற விவரத்தைச் சொல்லமுடியுமா ?

மாண்புமிகு திரு ஓ. பி. ராமன் : தனிக் கேள்வி போடவும்.

திரு. நா. காசிராமன் : 1966–67-ம் ஆண்டுக்குப் பிறகு இம்மாதிரிக் கம்பங்கள் வாங்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவ்வாறு வாங்காததற்குக் காரணம் ரீயின்ஃபோர்ஸ்ட் கான்க்ரீட் போஸ்டுகளைப் பயன்படுத்துவதுதான் என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு ஓ. பி. ராமன் : அதற்கான விவரம் இல்லை.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : மின்சார போர்டுக்குத் தேவையான சாமான்களைச் சர்க்கார் கோவாப்பரேடிவ் சொஸைடியின், கோவாபரேடிவ் இன் ஸ்ட்ரியல் சொஸைடிஸ் போன்ற ஸ்தாபனங்களின் மூலம் வாங்குவதால் அந்த ஸ்தாபனங்களுக்கு ஊக்கம் அளிப்பதாக இருக்கும் என்ற காரணத்தால் இனிமேலாவது அத்தகைய ஸ்தாபனங்களிடமிருந்துசர்க்கார் காரியங்களுக்கான சாமான்களை வாங்குவதற்கு அரசு ஊக்கம் அளிக்குமா ?

மாண்புமிகு திரு ஓ. பி. ராமன் : இது ஒரு நல்ல யோசனையாகக் கருதப்படும்.

அமைச்சர்களுக்கு வாங்கப்பட்ட புதுக் கார்கள்.

* 14—வினா : **திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அமைச்சர்களின் உபயோகத்திற்காகப் புதிய கார்கள் எத்தனை வாங்கப்பட்டன ?

(இ) அவற்றின் ரகங்களின் விபரமும், விலையின் விபரமும் யாவை ?

(உ) பழைய கார்கள் என்ன செய்யப்பட்டன ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி :

(அ) அமைச்சர்கள் பயன்படுத்துவதற்காக ஒன்பது புதிய அம்பாசடர் மோட்டார் வண்டிகள் அரசாங்கத்தினால் வாங்கப்பட்டன.

(இ) விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

தொடர் எண்.	வண்டியின் வகை, எண், பெயர்.	மொத்த விலை	
எண். (1)	(2)	(3)	
		ரூ.	காசு.
1	MSR—7007 (அம்பாசடர்)	19,327	39
2	MSR—9999 (அம்பாசடர்)	19,327	39
3	MSR—9009 (அம்பாசடர்)	19,327	39
4	MSR—9090 (அம்பாசடர்)	19,327	39
5	MSR— 696 (அம்பாசடர்)	19,327	39
6	MSR—9955 (அம்பாசடர்)	19,327	39
7	MSR—7777 (அம்பாசடர்)	19,327	39
8	MSR—9393 (அம்பாசடர்)	19,327	39
9	MSQ—2728 (அம்பாசடர்)	19,617	90

(உ) பழைய மோட்டார் வண்டிகள், தலைமைச் செயலகத்தில் உள்ள பிற மோட்டார் வண்டிகளுடன் சேர்க்கப்பட்டு விட்டன.